விடை—

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், திட்டக்குடி தொகுதி, மங்களூர் ஊராட்சியில் இயங்கிவரும் கால்நடை மருந்தகத்திற்கு புதிய கட்டடம் ரூ.26.66 இலட்சம் செலவில் 2011–2012 ஆம் ஆண்டு நபார்டு RIDF XVII திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு, நாளது தேதிவரை நல்ல நிலையில் உள்ளது.

(18–9–2017 முதல் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் தகுதி நீக்கம் செய்யப்பட்ட உறுப்பினர்களால் கொடுக்கப்பட்ட வினா வரிசை எண்கள் 48 மற்றும் 93–க்கான வினாக்கள்—விடைகள் பட்டியல் 4-ல் இடம் பெறவில்லை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) வெளி மாநிலங்களில் கல்வி பயிலும் தமிழக மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சற்று பொறுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய மாணவர்கள் வெளி மாநிலங்களுக்குச் சென்று கல்வி பயிலக்கூடிய நேரத்தில் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை அமைந்திருக்கிறது. எனவே, அதுகுறித்து விவாதிக்க அவசரமாக இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் அதைக் கொண்டு வர விரும்புகிறேன். வெளி மாநிலங்களில் படிக்கச் செல்லக்கூடிய மாணவர்கள் பல்வேறு இன்னல்களுக்குத் தொடர்ந்து ஆளாகிக்*

2018 ஜனவரி 11] [திரு. மு.க. ஸ்டாலின்]

கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே புது டில்லியிலுள்ள AIIMS *மருத்துவமனையில் மருத்துவ மாணவர் சரவணன் அவர்கள் மர்மமான முறையிலே இறந்தார் என்பது எல்லோருக்கும் தெரியும். அது தற்கொலையாக இருக்க வாய்ப்பில்லை என்று பிரேதப் பரிசோதனை அறிக்கையிலேயே மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், அதுகுறித்து இதுவரையிலே எந்தவித மேல் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றே நான் கருதுகிறேன். ஆக இப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையிலே, அண்மையில் குஜராத் மாநிலம், அகமதாபாத்தில் மருத்துவ மேற்படிப்பு படித்துக் கொண்டிருக்கக்கூடிய திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த டாக்டர் மரியராஜ், தமிழர் என்கிற காரணத்தால் பல்வேறு தொல்லைகளுக்கும்,* torture*–க்கும் ஆளாகியிருக்கிறார். ஆக, இந்த நிலையிலே அவர் தற்கொலை முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறார். எனவே, இதுபற்றி* Indian Medical Association*–ன்* State Secretary *திரு. ஸ்ரீதர் என்பவர் நம்முடைய சுகாதாரத் துறைச் செயலாளருக்கு ஒரு புகார் கடிதம் அனுப்பி வைத்திருக்கிறார். 10–1–2018 அன்று அந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அதிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். ஆகவே, உடனடியாக நம்முடைய அரசு குஜராத் அரசைத் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுத்து, அந்த மாணவருக்கு உரிய பாதுகாப்பை வழங்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–05

அதுமட்டுமல்ல, வெளி மாநிலங்களில் படிக்கக்கூடிய தமிழக மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பை இந்த அரசு உறுதி செய்திட வேண்டும். எந்தவகையில் உறுதி செய்ய வேண்டுமென்று சொன்னால், மருத்துவக் கல்வி இயக்குநரகத்திலே இதற்கென்று ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தினால்தான் உரிய பாதுகாப்பை நிச்சயமாக ஏற்படுத்தித் தர முடியும். வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து, ‘NEET’*தேர்வின் காரணமாக இன்றைக்கு ஏராளமான மாணவர்கள் சுதந்திரமாகப் படித்துக் கொண்டிருக்கிறார்கள்; பாதுகாப்போடு படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டிலிருந்து ஒருவரோ, இருவரோ வெளி மாநிலத்திற்குச் செல்கின்ற இடத்தில் இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்ற நேரத்தில், இது உண்மையிலேயே வருந்தத்தக்கதாக இருக்கிறது; வேதனைப்படக்கூடிய ஒரு நிகழச்சியாக அமைந்திருக்கிறது.*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 ஜனவரி 11

உடனடியாக அரசு இதிலே உரிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, நான் அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகளில் இந்தச் செய்தி வந்தவுடனே, மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய அரசுச் செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள்மூலம் உடனடியாக குஜராத் மாநிலத்தினுடைய அரசுச் செயலாளரைத் தொடர்பு கொண்டு, உரிய விளக்கங்களையெல்லாம் கேட்டுப் பெற்றிருக்கிறோம். அந்தவகையில், திருநெல்வேலி மாவட்டம், ஒத்தவேடு, இராமேஸ்வரம் கிராமத்தைச் சார்ந்த திரு. மாரியப்பன் என்பவருடைய மகன் திரு. மரியராஜ் என்பவர் ஏற்கெனவே திருநெல்வேலியில் M.B.B.S., படித்துவிட்டு, அதற்குப்பின் மேற்படிப்புக்கு தேசிய நுழைவுத் தேர்வு மூலமாக 2015 ஆம் ஆண்டு M.S. (General Surgery) அங்கே படித்துக் கொண்டிருக்கிறார். அங்கு படித்துக் கொண்டிருந்த மாணவரை சக மாணவர்களும், பேராசிரியர்களும் தன்னை இன ரீதியாக மனம் புண்படும்படி பேசுகிறார்கள் என்ற புகார் எழுந்து, அந்தப் புகாரை அவர் 26–9–2017 அன்று தேசிய ஆதி திராவிடர் நல ஆணையத்துக்கு அனுப்பியிருக்கிறார். குஜராத் மாநிலத்திற்குப் புகாராக அனுப்பியிருக்கிறார். அதைத் தொடர்ந்து, அதுமாதிரியான தொந்தரவுகள் இருந்ததற்குப் பின்பும், அவருக்கு உரிய வாய்ப்புகள் M.S. (General Surgery)–ல் வழங்கப்படவில்லை என்ற மன அழுத்தத்தில் அவர் 5–1–2018 அன்று கல்லூரி விடுதியிலே அளவுக்கு அதிகமாக தூக்க மாத்திரைகளை உட்கொண்டு மயக்க நிலையிலே இருந்திருக்கிறார். மயக்க நிலையிலே இருந்த அந்த மாணவரை உடனடியாக சக மாணவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, தற்போது அவர் நல்ல நிலையிலே சிகிச்சை பெற்று வருகிறார். தொடர்ந்து இதுகுறித்து உரிய வழக்குப் பதிவுசெய்ய வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல, தமிழகத்திலிருந்து செல்லக்கூடிய மாணவர்களுடைய பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டுமென்ற முதலமைச்சருடைய அறிவுரையின்படி, அந்த அரசுச் செயலாளருக்கு அறிவுறுத்தியதன் பேரில், உடனடியாக குஜராத் மாநிலத்தில் உள்ள Shahibabad காவல் நிலையத்தில் வழக்கு தற்போது பதிவு செய்யப்பட்டு, உரிய விசாரணையை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த மாணவருடைய

2018 ஜனவரி 11] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

குடும்பத்தாரிடமும் நம்முடைய அரசு அதிகாரிகள் தொடர்பு கொண்டு பேசுகிறார்கள். நல்ல ஆக்கப்பூர்வமான கருத்துகள். தமிழ் மாநிலத்திலிருந்து, இந்தியாவிலுள்ள எந்த மாநிலமாக இருந்தாலும் அங்கு சென்று படிக்கக்கூடிய மாணவர்களுடைய பாதுகாப்பை உறுதிசெய்யக்கூடிய நிலையை நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(ஆ) அரசு நிகழ்ச்சிக்கான அழைப்பிதழில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் பெயர் விடுபட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நான் என்னவென்று இன்னும் சொல்லவில்லை. மாண்புமிகு அமைச்சர்கள் தயாராக இருக்கமாட்டார்கள். (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசு நிகழ்ச்சிகள் ஒரு தொகுதியில் நடைபெறுகின்றபோது, அந்தத் தொகுதியினுடைய எம்.எல்.ஏ. வின் பெயரையும் போடுவது வழக்கம்; போட வேண்டும். திருவள்ளூர் தொகுதியில் பள்ளி மாணவ, மாணவியருக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகுதியின் எம்.எல்.ஏ., திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள். ஆனால், பொன்னேரி எம்.எல்.ஏ.–வின் பெயரை இந்தத் தொகுதியில் போட்டிருக்கிறார்கள்; தொகுதி எம்.எல்.ஏ.–வின் பெயரைப் போடவில்லை. இது நியாயம்தானா என்பதைத்தான் நான் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இதுகுறித்து நேற்றையதினமே என்னுடைய கவனத்திற்கு வந்தது. (குறுக்கீடு) உடனடியாக நான் தலைமைச் செயலாளருக்கு அறிவுறுத்தியிருக்கிறேன். சரியான உத்தரவுகளை நான் வழங்கியிருக்கிறேன். மேற்கொண்டு, இந்தமாதிரி நடக்காமல் பார்த்துக்கொள்ள நான் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். ஆகவே, இந்தப் பதிலோடு திருப்தியடையுங்கள். (குறுக்கீடு)*